பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய மாணவ, மாணவியருக்கு இயங்கி வருகின்ற விடுதிகள் பற்றிய ஆய்வு நடத்தினேன். அப்போது, அந்த ஆய்வின்போது, பெரும்பாலான இத்தகைய மாணவ, மாணவியர் விடுதிகள், வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன என்பது தெரிய வந்தது. மேலும், பெரும்பாலான இத்தகைய மாணவ, மாணவியர் விடுதிகளில் மின்சாரம் இல்லை, குடி தண்ணீர் வசதி இல்லை, சுகாதார துப்புரவு வசதிகள் இல்லை என்பதெல்லாம் தெரிய வந்தது. ஆகவே, இதற்கு ஒரு crash programme, ஓர் அவசரத் திட்டம் ஒன்றை வகுத்து, இரண்டு ஆண்டுகளுக்குள் ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கும் இயங்கி வருகின்ற விடுதிகள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களாகக் கட்டப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான நிதியும் ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்காகத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் ஒரு பங்கை எடுத்துக்கொண்டு, இதை மிகவும் சிரத்தையுடன் இந்த அரசு நிறைவேற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமன்றி, தமிழகம் முழுவதிலும், மோசமான நிலையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற இத்தகைய மாணவ, மாணவியர் விடுதிகள் அனைத்தும் இரண்டாண்டுகளுக்குள் எல்லா வசதிகளுடன் சொந்தக் கட்டடங்களாகக் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

42–

ஆக்கிரமிப்பு

***18005–திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வக்ஃபு வாரியச் சொத்துக்களை எந்தெந்த மாவட்டங்களில் ஆக்கிரமித்து அனுபவித்து வருகிறார்கள் என்று அரசு கண்டறிந்துள்ளது?

2002 அக்டோபர் 28]

(ஆ) இத்தகைய ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வக்ஃபு வாரியச் சொத்துக்களைக் கீழ்க்காணும் 17 மாவட்டங்களில் ஆக்கிரமித்து, அனுபவித்து வருகிறார்கள்:

(1) சென்னை (2) திருவள்ளூர் (3) காஞ்சிபுரம் (4) கடலூர் (5) விழுப்புரம் (6) வேலூர் (7) திருவண்ணாமலை (8) நாகப்பட்டினம் (9) திருச்சி (10) புதுக்கோட்டை (11) சேலம் (12) தருமபுரி (13) விருதுநகர் (14) ஈரோடு (15) கோயம்புத்தூர் (16) நீலகிரி மற்றும் (17) இராமநாதபுரம்.

(ஆ) வக்ஃபுச் சொத்து ஆக்கிரமிப்புகளை அகற்ற, எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய அறிவுரைகளுக்கேற்ப, வக்ஃபுச் சட்டம் 9–வது பிரிவு, 54(1)–ன்படி, ஆக்கிரமிப்பாளர்களுக்கு அறிவிக்கை அனுப்பப்பட்டுள்ளது. வக்ஃபுச் சட்டம் 1995 பிரிவு 55–ன்கீழ் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றக்கோரி, கோட்டாட்சி அலுவலர்களுக்கு மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், வக்ஃபுச் சொத்து ஆக்கிரமிப்புகளை அகற்ற உடனே நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தலைமைச் செயலரிடமிருந்து நேர்முகக் கடிதம் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் 17 மாவட்டங்களிலே வக்ஃபு வாரியத்தினுடைய சொத்துக்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாக இங்கே புள்ளிவிவரங்களோடு எடுத்துச்சொன்னார்கள். இந்த 17 மாவட்டங்களில், மொத்தம் எவ்வளவு சொத்துக்கள்? அவற்றின் மதிப்பு எவ்வளவு? எவ்வளவு பேர் ஆக்கிரமித்திருக்கிறார்கள்? அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற உடனடியாக இந்த அரசு வருவாய்த் துறை மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே இப்போது கூறியிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இந்த அரசு வருவாய்த் துறை மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்குமா? உடனடியாக அந்தச் சொத்துக்களைத் திரும்ப வக்ஃபு போர்டுக்கு எடுக்க இன்னும் துரித நடவடிக்கை எடுப்பார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி 17 மாவட்டங்களில் இதுவரை, 715

[2002 அக்டோபர் 28

ஆக்கிரமிப்பாளர்கள், வக்ஃபுச் சொத்துக்களை அனுபவித்து வருவதைக் கண்டறிந்து, மேற்படியாளர்களுக்கு வக்ஃபுச் சட்டம் 9–வது பிரிவு 54(1)–ன்கீழ் அறிவிக்கை அனுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்தவர்களை, அதன் முதன்மைச் செயலாளர் நேரில் விசாரணை செய்து, வக்ஃபுச் சொத்து ஆக்கிரமிப்புகளை உறுதி செய்ததுடன், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி, வக்ஃபுச் சட்டம் 95–வது பிரிவு 54(3)–ன்கீழ் செயல்முறை ஆணை இதுவரை 404 ஆக்கிரமிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் வக்ஃபுச் சட்டம் 1995 பிரிவு 55–ன்கீழ் ஆக்கிரமிப்பாளைர்களை அகற்றக் கோரி, கோட்டாட்சியர்களுக்கு 299 மனுக்கள் அனுப்பப்பட்டு...

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: கோட்டாட்சியர்களுக்கு 299 மனுக்கள் அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளன. இது சம்பந்தமாக பல நினைவூட்டுகள் அரசாலும், தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திலிருந்தும் அனுப்பப்பட்டுள்ளன. இதுவரை எந்த ஆக்கிரமிப்பாளரும் வெளியேற்றப்படவில்லை. எனவே, இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தி, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தலைமைச் செயலாளர் மூலம் நேர்முகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஐ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17 மாவட்டங்களில் வக்ஃபு வாரியத்தினுடைய ஆக்கிரமிப்பாளர்கள் எவ்வளவு பேர் என்று கேட்கவில்லை. சொத்தின் மதிப்பு எவ்வளவு என்பதற்குத்தான் துணை வினா எழுப்பினேன். சொத்தின் மதிப்பு எவ்வளவு என்பதனை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீண்ட பதிலாக இருக்கும். விவர அறிக்கையாகத்தான் வைக்க முடியும்.

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடுங்கள். அதற்கு உரிய பதில் சொல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 43, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.